**குண்டசாலை பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் அறிக்கை 2018 ஜூலை 02 திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாவுல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்லேகலை ஜனசவிகம வீடமைப்பு திட்டத்தினால் குண்டசாலை பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 1.044 ஹெக்டயார் காணி மற்றும் அளவை செய்யப்படாத 16 காணிகளின் பெறுதியினை மதிப்பீடு செய்து கணக்கிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான டெக்டர் டேலர் ஒன்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அன்று இறுதி இருப்பினுள் பௌதீக ரீதியாக காணப்படாத ரூபா 4,837,105 ஆன நீர் வேலை பொருட்களின் இருப்பொன்று நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அன்று நிலவிய ரூபா 130,000 பெறுமதியான 26 டொன் இயற்கை பசளை கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் சபையின் காணிகள் மற்றும் கட்டிடங்கள் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,574,595 ஆன நிர்மாணங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த வாசிகசாலை புத்தகங்களின் பெறுமதி ரூபா 23,887 இனால் கூட்டி கணக்கிடப்பட்டிருந்தது.

(எ) மக்கள் வங்கியில் நிலையான வைப்புகளின் மீளாய்வாண்டிற்குரிய வட்டி மற்றும் பெறவேண்டிய வட்டி ரூபா 1,006,849 தொகை கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,379,100 பெறுமதியான உபகரணங்கள் மற்றும் தளபாட உபகரணங்கள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டினுள் தீர்கப்படாத ரூபா 7,928,837 பெறுமதியான முற்பணத்தினுள் அலுத்வத்த இயற்கை பசளை கொட்டில் நீடிப்பிட்கான பட்டியல் கொடுப்பனவு ரூபா 3,827,160 ஆன பெறுமதி உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அன்று பெறப்பட வேண்டிய ரூபா 711,498 பெறுமதியான நீதிமன்ற தண்டப்பணம் கடன்படுனராக கணக்கிடப்படவில்லை.

(ஓ) மீளாய்வாண்டில் டிப்லோமா பாடநெறிக்காக செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா 45,000 இனால் குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டில் பதிவழிக்கப்பட்டிருந்த ரூபா 478,700 ஆன கழிவு பொருள் குத்தகை கணக்குகளிலிருந்து நீக்கப்படவில்லை.

(க) குண்டசாலை மற்றும் பாததும்பர பிரதேச சபைகள் ஒப்பந்தத்தின் கிழ் நடாத்திச் செல்லும் அலுத்வத்த இயற்கை பசளை கொட்டில் எனும் கருத்திட்டத்தின் வருமானம் மற்றும் செலவுகளிற்காக வேறாக கணக்கொன்று தயாரிக்கப்படாமல் சபையின் வருமானம் மற்றும் செலவு கணக்கிற்கு வரவு மற்றும் செலவு வைக்கப்பட்டிருந்தன.

### 1.3.2 எதிர்பாராத பொறுப்புகள்

மொரகஹபிடிய வியாபார கட்டிடத் தொகுதியின் டென்டர் ஒப்படைப்பு தொடர்பாக கட்டிட நிர்மாணம், அனுமதியற்ற நிர்மாணங்களை தடை செய்தல் மற்றும் பாதைகள் தொடர்பாக சபைக்கு எதிராக 17 தரப்பினர்கள் 15 வழக்குகளை தாக்கள் செய்திருந்த போதும், கணக்குகளில் காட்டப்படவில்லை.

### 1.3.3 இணங்காத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படும் கூட்டுடத் தொகை ரூபா 121,917,551 ஆன 06 கணக்கு விடயங்களிற்குரிய மீதிகளுக்கும் மற்றும் துணைப் பதிவேடுகளில் குறிப்பிடப்படும் மீதிகளிற்குமிடையில் ரூபா 73,541,203 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 தொங்கல் கணக்குகள்

முன்னைய ஆண்டு இறுதியில் நிதிக்கூற்றுகளில் குறிப்பிடப்பட்ட ரூபா 15,239 ஆன தொங்கள் கணக்கு வரவு மீதியிற்கு ஆண்டினுள் ரூபா 20 செலவு வைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 15,219 ஆன வரவு மீதியொன்றானது. முன்னைய ஆண்டிலும் தொங்கள் கணக்கு மீதியிற்கு ரூபா 143 வரவு வைக்கப்பட்டிருந்ததுடன், இம் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

#### (அ) பெற வேண்டிய கணக்கு

(i) மீளாய்வாண்டு இறுதி திகதியில் பெற வேண்டிய 2 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,143,706 ஆனதுடன், அம் மீதி ஒரு வருட காலத்தை விஞ்சியிருந்தது.

(ii) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியிற்கு மெனிக்ஹின்ன பொது வியாபார கட்டிடத் தொகுதி கீழ் மாடியில் 12 கடையறைகளிலிருந்து மற்றும் முதலாம் மாடியில் 10 கடையறைகளிலிருந்து ரூபா 82,067 ஆன நிலுவை குத்தகை பணமும் மெனிக்ஹின்ன புதிய வியாபார கட்டிடத்தொகுதியில் 29 கடையறைகளிலிருந்து ரூபா 273,080 ஆன நிலுவை குத்தகை வாடகையும், மெனிக்ஹின்ன பேறூந்து தரிப்பிடத்திற்கு அன்மையில் 03 கடையறைகளிலிருந்து ரூபா 67,780 ஆன பணமும் அறவிடப்பட வேண்டியிருந்தன.

(iii) திகன ரனவிரு விதியில் 86 கடையறைகளிலிருந்து 2017 திசெம்பர் 15 திகதி வரை ரூபா 379,379 ஆன பணம் அறவிடப்பட வேண்டி இருந்தது.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் செலுத்த வேண்டிய 4 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 88,489,658 ஆனதுடன், அவற்றின் ஓராண்டு காலத்தையும் விஞ்சி இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 64,044,492 ஆனது.

### 1.3.6 கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கூட்டுத்தொகை ரூபா 21,924,075 ஆன கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தன.

**1.3.7 இணங்காமை**

**1.3.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| | | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மான்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் | | |
| | (i) | 132 (ஓ) பிரிவு | 110,000<br>24,570 | (i) திகன விளையாட்டரங்கு நிர்மான வைபவத்திற்கு பந்தல் நிர்மானித்தல் மற்றும் ''குழந்தைகளை காப்போம்'' தேசிய நிகழ்ச்சித்திட்டம் மற்றும் மகாவலி அதிகார சபையின் காணி உருதி விநியோகிக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக விடய பொறுப்பு அமைச்சரின் அனுமதியின்றி செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| | (ii) | 149 பிரிவு | 14,462,640 | சுற்றுலாதுறை அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட ஹோடல்களிலிருந்து அறவிடப்படும் 1 சதவீத வரி கணக்கிடப்படும் போது ஹோடல்களினால் சமர்பிக்கப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் வருமானம் பெறப்படுவதனால் அறவிடப்பட இயலுமான வருமானமொன்று சபை நிதியத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. |
| | (ii) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் 23 (அ) பிரிவின் பிரகாரம் 1533/16 இலக்கம் மற்றும் 2008 சனவரி 25 ஆம் திகதிய சூழல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரினால் வெளியிடப்பட்ட அதிவிஷேட வர்த்தமானி | 27,000 | சூழல் அனுமதி பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 09 நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்காத காரணத்தால் சபை நிதியத்திற்கு அறவிடவேண்டிய வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | (i) | நிதி பிரமாணம் 104 | 1,272,790 | 2016 ஆண்டி பண்டக மெய்மையாய்வு அறிக்கைகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட பெறுமதி இனங்காணப்பட்ட மற்றும் இனங்காணப்படாத 423 உருப்படிகளின் பற்றாக்குறை மற்றும் நூலகசாலை புத்தகங்களின் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதி பிரமாணம் 571 | - | 2017 ஆண்டிற்கான வைப்பு பதிவேடு நாளாதுவரையாக நடாத்தப்படாத காரணத்தால் தீர்க்கப்பட்ட மீதி, தீர்க்கப்பட வேண்டிய மீதி மற்றும் வருமானத்திற்கு எடுக்க வேண்டிய மீதிகளை இனங்காணுவதற்கு இயலாமலிருந்தது. |
| (iii) | நிதி பிரமாணம் 371 (4) | 450,450 | உப கட்டுநிதி பெறத் தேவையற்ற 9 சந்தரப்பங்களுக்காக உப கட்டுநிதி பெறப்பட்டிருந்தன. |
| (iv) | நிதி பிரமாணம் 371 (5) | 210,000 | தொடர்புடைய பிரிவின் பிரகாரம் பெறப்பட்ட உப கட்டுநிதயினை தீர்க்காத உத்தியோகத்தர் ஒருவருக்கு அது தீர்க்கப்படும் வரை மீண்டும் உப கட்டுநிதி வழங்கப்பட கூடாத போதும், 5 சந்தர்பங்களில் 2 உத்தியோகத்தர்களுக்கு கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தன. |
| (v) | நிதி பிரமாணம் 371 (5) | 330,000 | கட்டுநிதி வழங்கப்படும் ஆண்டின் திசெம்பர் 31 திகதிக்கு முன் கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதும், முறையே 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் வழங்கப்பட்ட 3 மற்றும் 6 கட்டுநிதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) பெறுகை வழிகாட்டி கோவை

| | | | |
|---|---|---|---|
| (i) | 2.11.3 | - | டென்டர் குழு அறிக்கை பெறுகை வழிகாட்டி கோவையில் குறிப்பிடப்படும் உரிய படிவத்தில் உள்ளடக்கி வருகை தந்திருந்த அங்கத்தவர்களால் கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2.8.1 (ஆ) | 1,157,450 | கணனி மற்றும் அச்சு இயந்திரங்கள் கொள்வனவு செய்யும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிற்கு விடயம்சார் விஷேட நிபுணர் ஒருவர் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) 2012 சனவரி 05 திகதிய இலக்கம் 1/2012 கொண்ட பொது நிதி சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| (i) | 3.2 (iv) பிரிவு | | அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் அச் சங்கங்களினால் துணை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தன. |
| (ii) | 3.2 (i), (ii) ,(iii) பிரிவுகள் | | சமுதாய அடிப்படை அமைப்புகளிற்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட முன் , நிதி இயமுமை மற்றும் முன் அனுபவம் தொடரபாக தகவல்கள் பெறப்பட்டிருக்கவில்லை. |

**1.3.8 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பலகொல்ல மொரகஹபிட்டிய பல்நோக்கு கட்டிடத்தின் 48 கடையறைகளிற்காக 2014 நவம்பர் 24 திகதி மதிப்பீட்டு திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த மதிப்பீடு, 2015 பெப்ரவரி 26 திகதிய மகாசபையின் போது மேல் மாடிக்காக ரூபா 500 மற்றும் கீழ் மாடிக்காக ரூபா 1,000 ஆக வாடகை அறவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டு வாடகை அறவிடுவதன் காரணத்தால் ரூபா 9,900,000 ஆன வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) திகன பல்நோக்கு கட்டிடத்தில் 32 கடையறைகளுக்காக 2014 நவம்பர் 24 திகதி மதிப்பீட்டு திணைக்களத்தினால் கிடைக்கப் பெற்ற மதிப்பீட்டு வாடகையினை அறவிடாமல் 2014 நவம்பர் 24 மகா சபையின் உத்தேசிக்கப்பட்ட கட்டணத்தை அறவிடுவதன் காரணமாக சபைக்கு ரூபா 1,908,000 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 77,794,557 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 56,976,713 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டி தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பில் போடப்பட்ட வருமானம்** | **சேர்க்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இன் மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம** | **பில் போடப்பட்ட வருமானம** | **சேர்க்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 இன் மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி மற்றும் குத்தகை வாடகை | 7,663,428 | 7,846,617 | 5,751,996 | 4,983,478 | 7,487,520 | 7,931,869 | 57,093,663 | 4,999,325 |
| ஏக்கர் வரி | 7,685 | 6,978 | 936 | 41,570 | 6,885 | 6,847 | 1,310 | 42,855 |
| குடை வாடகை | 6,471,658 | 6,084,477 | 4,248,115 | 1,836,361 | 6,129,373 | 6,627,136 | 5,831,582 | 1,981,846 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 5,210,000 | - | 6,179,311 | - | 6,330,000 | - | 6,335,981 | - |
| ஏனைய வருமானம் | - | - | 6,144,177 | - | - | - | 9,210,611 | - |
| முச்சக்கரவண்டி | 442,500 | 973,000 | 474,600 | 1,775,449 | 732,000 | 1,026,781 | 382,144 | 2,211,495 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| குப்பை வரி | 2,142,500 | 2,691,500 | 1,763,400 | 1,730,940 | 2,061,200 | 2,011,200 | 1,318,700 | 1,845,240 |
| | ------------------ | ------------------ | ------------------ | ------------------ | ---------------- | ----------------- | -------------- | --------------- |
| | 21,937,771 | 17,602,572 | 24,562,535 | 10,367,798 | 22,746,979 | 17,603,833 | 80,173,991 | 11,080,761 |
| | ========= | ======= | ======== | ======== | ========= | ========= | ======== | ======== |

**2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ)** சபைக்கு சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு வழங்கும் போது மதிப்பீட்டு திணைக்களத்தினூடாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த மதிப்பீட்டு கடையறை வாடகையினை அறவிடாமல் சபை தீர்மானத்தின் மீது கடையறை வாடகை அறவிடப்பட்டதனால் சபை நிதியத்திற்கு இழப்பு ஏற்பட்டிருந்தது.

**(ஆ)** வீத வரி 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பிடப்பட வேண்டிய போதிலும், 2007 ஆண்டின் வீத வரி மதிப்பீட்டின் மீது 2017 ஆண்டு வரையும் வீத வரி அறவிடப்பட்டதன் காரணத்தால் பெருமளவு வருமானம் சபைக்கு இழக்கப்பட்டமை மற்றும் புது வீத வரி அளவுகள் இனங்காணுவதற்கு முடியாமல் இருந்தது.

**2.2.3 வீத வரி மற்றும் குத்தகை**

**(அ) வீத வரி**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 4,983,478 ஆன நிலுவை மீதி நிலவிய போதும் ஆண்டினுள் அவற்றிலிருந்து ரூபா 2,206,658 மாத்திரமே அறவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டினுள் பில்லிடப்பட்ட வருமானம் ரூபா 7,846,617 இலிருந்து ரூபா 5,751,996 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

**(ஆ) ஏக்கர் வரி**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 41,570 ஆன நிலுவை மீதி நிலவிய போதும் ஆண்டினுள் அவற்றிலிருந்து ரூபா 4,252 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**(இ) குப்பை வரி**

குப்பை வரி ஆரம்ப நிலுவை ரூபா 1,730,940 ஆனதுடன், ஆண்டினுள் ரூபா 578,200 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 1,845,240 ஆன நிலுவை காணப்பட்டது.

**2.2.4 வாடகை**

**கடையறை வாடகை**

ஆண்டு ஆரம்பத்தில் கடையறை வாடகை நிலுவை ரூபா 2,378,362 ஆனபோதும், ஆண்டினுள் ரூபா 1,192,070 இனை மாத்திரமே அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**2.2.5 அனுமதிப் பத்திர கட்டணம்**

வியாபார தளங்கள் தொடர்பாக முறையான மெய்மையாய்வொன்று மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்படாததனால் அனுமதிப்பத்திர கட்டணம் செலுத்தாத நிறுவனங்களை இனங்காண இயலாமலிருந்தது.

**2.2.6 ஏனைய வருமானம்**

**முட்சக்கர வண்டி தரிப்பிடக் கட்டணம்**

மீளாய்வாண்டில் ஆரம்ப நிலுவை ரூபா 1,775,449 ஆனதுடன், ஆண்டினுள் ரூபா 208,591 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. ஆண்டின் பில் இடல் ரூபா 1,026,781 ஆனதுடன், அறவிடல் ரூபா 382,144 ஆனதன் காரணமாக ஆண்டு இறுதியில் மொத்த நிலுவை ரூபா 2,211,495 ஆன உச்ச பெறுமானமானது.

**2.2.7 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிற்கு பெற வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,022,004 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 101,114,749 ஆனது.

**3. செயற்பாட்டு மீளனய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 3 ஆம் பந்தியின் கீழ் பொது சுகாதாரம். பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்தமைத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், பொது மக்கள் நலன்கள், வசதிகள் மற்றும் நலன்புரி எனும் சபை மூலம் நிறைவேற்ற வேண்டியிருந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) ஒதுக்கீடு வழங்காமை**

தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயற்திட்டத்தின் பிரகாரம் சபை மூலம் நிறைவேற்ற வேண்டியிருந்த 06 வேலைகளுக்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு வழங்கப்பட்டிக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக் கொள்ளாமை**

செயற்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள ரூபா 31,564,001 தொகை செலவிடப்பட்ட போதும் எதிர்பார்க்கப்ட்ட வெளியீட்டு மட்டத்தை (Out put) அடைந்திருக்கவில்லை. விபரம் கீழ் வருமாறு.

| நடவடிக்கைகள் | மதிப்பீட்டு பெறுமதி | வெளியீட்டு அளவின் பெறுமதி | அவதானிப்பு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | |
| திகனை வியாபார கட்டிடத்தொகுதி நிர்மாணம் | 32,740,807 | 31,564,001 | 2011 ஆண்டு நிர்மாணிக்கப்ட்ட இவ் வியாபார கட்டிடத் தொகுதியில் 05 கடையறைகள் பூர்த்தி செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

**(இ) எதிர்பார்க்கப்பட்ட விளைவினை (Out come) அடையாமை**

பல்லேகளை ரஜரூபஅங்காடி நிர்மாணத்திற்கு ரூபா 9,000,000 செலவிடப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டத்தை அடைந்திருந்த போதும் எதிர்பார்க்கப்பட்ட விளைவு அடையப்படவில்லை. விவரம் பின்வருமாறு.

| நடவடிக்கைகள | 2017 திசெம்பர் 31 வரை செலவிடப்பட்ட தொகை. | அவதானிப்புகள் |
| --- | --- | --- |
| | ரூபா | |
| பல்லேகளை ரஜரூப அங்காடி | 9,000,000 | குண்டசாலை பிரதேச சபைக்கு சொந்தமான பல்லேகளை ரஜரூபஅங்காடி 2015 திசெம்பர் வரை ரூபா 9 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணப் பணி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் சாத்தியப்பாட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கருத்திட்டத்தின் தகைமையை இனங்கண்டிருக்காமை காரணமாக 2016 ஆகஸ்ட் மாதம் முதல் செயலற்று நிலவியது. |

**(ஈ) செயற்படுத்தப்படாத நடவடிக்கைகள்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டினுள் 37 நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்ட்டு அதற்காக ரூபா 3,234,534 ஆன ஒதுக்கீடு பெறப்பட்ட போதும், கருத்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தன.

**(உ) கழிவு பொருள் முகாமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) குண்டசாலை மற்றும் பாததும்பர பிரதேச சபைகள் ஒன்றினைந்து செயற்படுத்தும் தன்னியக்க தொழில்நுட்ப இயற்கை பசளை உற்பத்திக் கைத்தொழிலிலிருந்து தினத்தோறும் 04 டொன் பசளை உற்பத்தி செயற்பட்ட போதும், 02 பசளை கொட்டும் இயந்திரங்கள் மாத்திரம் இருப்பதன் காரணமாக தினத்தோறும் உற்பத்தி செய்யப்படும் பசளையின் அளவு மட்டுப்படுத்தப்பட்டுவதனால் பெருந் தொகை பசளை குப்பை கொட்டிலினுள் ஒன்று சேர்திருந்தன. உற்பத்தி செய்யப்படும் பசளைகளின் அளவிற்கு இணங்கக்கூடிய உற்பத்தி இயந்திரமொன்று 2017 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட போதும் அதிக சத்தம் மற்றும் வினைத்திறனின்மை காரணமாக பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் பசளை உற்பத்தி கணிப்பிடப்பட்டிருக்காததுடன், பசளை உற்பத்தியினால் ரூபா 138,720 ஆன வருமானம் மாத்திரமே கிடைத்திருந்தது.

(iii) இயற்கை பசளை உற்பத்திக்காக பயன்படுத்தப்படாத உக்கலடையாத பொருட்கள் மீள்சுழற்சிக்கு உற்படுத்தப்படாது சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் இடப்பட்டிருந்தன.

**(ஊ) நிலையான அபிவிருத்தி நோக்குகள்**

சபை நிலையான அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு இலக்குகளை அறிந்து அதனை அடைந்து கொள்ள மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான அளவீடு ஒன்றினை இனங்கண்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

குண்டசாலை மீன் அங்காடியினை பல வருடங்களாக குத்தகைக்கு பெற்றிருந்த நபரிற்கே 2017 ஜனவாரி 01 முதல் 2021 டிசம்பர் 31 வரை நீண்ட கால குத்தகைக்கு வழங்க சபை நடவடிக்கை எடுத்திருந்தது. நீண்ட கால அடிப்படையில் குத்தகை வழங்கும் போது முற்பணம் (Key money) அறவிட நடவடிக்கை எடுத்திருக்காததுடன், குறித்த ஒப்பந்தம் திகதியின்றி கையொப்பமிடப்பட்டிருந்தது.

**3.3 மனித வள முகாமை**

**(அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை**

(i) அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாரான ஆளணி பரிசோதனையின் போது 8 பதவிகளில் 17 ஊழியர் வெற்றிடங்களும் 4 பதவிகளில் 5 ஊழியர் மிகையும் நிலவின.

(ii) ஆயுர்வேத வைத்திய நிலையத்தில் எவ்வித வெளி நோயாளர் சாரகமும் நடாத்தப்பட்டிருக்காத போதும், அங்கு சேவையில் ஈடுபட்டிருந்த ஆயுர்வேத வைத்திய அதிகாரியிற்கு 2016 ஆண்டிற்காக ரூபா 630,304 மற்றும் 2017 ஆண்டிற்காக ரூபா 658,044 சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தன.

**(ஆ) ஊழியர் கடன்**

2017 ஆண்டு இடமாற்றம் பெற்று சென்ற இரு அலுவலர்களின் ரூபா 438,084 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஊழியர் பிணை**

ஊழியர் பிணை பதிவேட்டில் 2017 ஆண்டு இடமாற்றம் பெற்று சென்ற இரு அலுவலர்களுக்குரிய ரூபா 4,622 ஆன மீதியொன்று நிலவும் பிணை வைப்புக் கணக்கு புத்தகம் குறித்த நிர்வனத்திற்கு ஒப்படைக்கப்படவில்லை.

**3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

மின் தொழில் நுட்பவியலாளரினால் பொருட் கோரட் கடிதம் சமர்பிக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்ற பொருட்களிற்கும் மின் பொருட் பதிவேட்டிற்கும் இடையில், 89 CFL குமிழ்களினால் ரூபா 53,940 இனாலான வேறுபாடு நிலவியது.

3.5 **கருத்து வேறுபாட்டிற்குட்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்**

கடையறை குத்தகை வழங்கல் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரின் 2016 மாரச் 17 திகதிய இலக்கம் 2016/3 கொண்ட சுற்றுநிருபம் பிரகாரம் சந்தை கடையறைகளை குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தத்தில் குத்தகை பெறுனர் மற்றும் உள்ளூராட்சி நிர்வனத்தின் தவிசாளர் / செயலாளரினால் இணக்கப்பாட்டிற்கு வர வேண்டிய போதும், குறித்த ஒப்பந்தத்தில் வழக்கறிஞர் ஒருவரின் ஒப்பம் இடப்பட்டு ஓர் ஒப்பந்தத்திற்கு ரூபா 1,000 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.6 சொத்துக்கள் முகாமை**

**3.6.1 பராமரிப்பு மற்றும் பழுதுபார்தல் மேற்கொள்ளாமை**

யமகா வகை துவிச்சக்கர வண்டியொன்று 2018 டிசம்பர் 19 திகதி வரை செயலிழந்து அலுவலக வளவில் இடப்பட்டிருந்தது.

3.6.2 **விளைவற்ற / குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) டிபன்டர் வண்டி ஒன்று 2014 டிசம்பர் 11 திகதி முதல் செயலற்று நிலவியது.

(ஆ) சபைக்கு சொந்தமான 13 கடையறைகளை குத்தகைக்கு வழங்காததனால் விளைவற்று நிலவியது.

(இ) 2015 பிரதேச சபை அங்கத்தவர் நிதியத்தின் கீழ் ரூபா 615,820 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த உடற்பயிற்சி உபகரணங்கள் மீளாய்வாண்டு டிசம்பர் 31 திகதி வரை பயன்படுத்தப்படாது சபை அலுவலக அறையொன்றில் குவிக்கப்பட்டிருந்தன.

3.6.3 **வாகன பயன்பாடுகள்**

(அ) சபைக்கு சொந்தமான டக்டர் வண்டியொன்று, ஹீநோ வகை லொறி வண்டியொன்று மற்றும் துவிச்சக்கர வண்டியொன்றும் 2017 டிசம்பர் 31 திகதி பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த போதும், பழுதுபார்த்து பயன்படுத்தவோ அல்லது பராதீனம் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) இலங்கை மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான ரஜவெள்ள நவ நகரில் உள்ள காணித் துண்டொன்று குழந்தைகள் பூங்கா ஒன்றை நடாத்திச் செல்ல குண்டசாலை பிரதேச சபைக்கு 2002 எப்ரல் 24 திகதி ஒப்படைக்கப்பட்டிருந்த போதும், இக் காணி 2002 ஆண்டு முதல் விளைவற்றதாக இருந்தது.

**3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**(அ)** சபைக்கு சொந்தமான இயற்கை பசளை கொட்டிலின் விஸ்தரிப்பு கருத்திட்டம் தொடரபாக போலியான தகவல்கள் உள்ளடக்கி 2 தினசரி பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிடுவதற்காக 2017 ஒக்டோபர் மாதம் ரூபா 86,940 செலவிடப்பட்டிருந்தது.

**3.8 பெறுகைகள்**

**3.8.1 பெறுகை திட்டம்**

பெறுகை திட்டத்திறகு அமைய பதிவேடு நாலாவதுவரையாக்கப்பட்டு நடாத்திச் செல்லப்பட்டிருக்கவில்லை. குழு அங்கத்தவர்கள் பெறுகை குழு தீர்மானங்களுக்காக ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தி பெறுமளவானவைகளுக்காக கையொப்பமிட்டிருக்கவில்லை. சில தீர்மானங்களுக்காக ஒரு அங்கத்தவர்கூட கையொப்பமிட்டிருக்கவில்லை.

**3.8.2 வழங்கள் மற்றும் சேவைகள்**

மீளாய்வாண்டில் ரூபா 38,781,297 பெறுமதியான 86 வேலைகள் சமூக அடிப்படை சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதும், இவ் வேலைகளை மாகாண சபை முன்னால் அங்கத்தவர்களும் வேறு நபர்களுமே நிரைவேற்றியதாக குறித்த சங்கங்களின் தவிசாளர், செயலாளர் மற்றும் பொருலாளர்களின் வாக்கு மூலங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டன.

**3.8.3 ஒப்பந்த நிர்வாகம்**

அளுத்வத்த இயற்கை பசளை கொட்டில் விஸ்தரிப்பு கருத்திட்டம்

மீளாய்வாண்டில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிலிருந்து கிடைத்த 20,000,000 ஒதுக்கீட்டின் மீது தனியார் ஒப்பந்தக்காரர்களுடன் ரூபா 18,418,822 தொகைக்கு, 2017 நவம்பர் 6 திகதி ஒப்பந்தம் செய்து ரூபா 16,364,652 செலுத்தப்பட்டிருந்தது.

(அ) இந் நிர்மாணத்திற்குரிய கட்டட வரைபடம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மதிப்பீட்டின் வேலை விடயம் இலக்கம் 4 பிரகாரம் கொட்டிலிற்கு மண் நிறைத்து அழுத்துவதற்காக கன மீட்டருக்கு ரூபா 1,036 வீதம் 465 கன மீட்டர்களுக்கு ரூபா 481,740

தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதும், கொடுப்பனவின் போது மேலதிக மதிப்பீடொன்று அங்கீகரிக்கப்படாமல் மூல மதிப்பீட்டை மீறி ரூபா 750,212 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) வெளியிலிருந்து மண் கொண்டுவரப்பட்டு நிறைத்து அழுத்துவதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதும், குப்பையுடன் கூடிய மண் நிறைத்து கன மீட்டருக்கு ரூபா 1,350 வீதம் 912 கன மீட்டர்களுக்கு ரூபா 1,231,956 தொகை உறுதிப்படுத்தப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மதிப்பீட்டின் வேலை விடயம் இலக்கம் 14:1 பிரகாரம், பாதையை கொங்கிறீட் செய்ய கன மீட்டருக்கு ரூபா 18,792 வீதம் 67.50 கன மீட்டர்களுக்கு ரூபா 1,268,460 தொகை மதிப்பிடப்பட்டிருந்ததுடன், அளவை பத்திரத்தின் பிரகாரம் கன மீட்டர் 44.28 இற்காக ரூபா 819,180 தொகை உறுதிப்படுத்தப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் எழுமாறாக 3 இடங்களை பௌதீக ரீதியாக பரீட்சித்த போது அதன் கன அளவு 6” , 4.5” , 3” ஆக காணப்பட்டதன் காரணமாக கொங்கிறீட் கன மீட்டர் 16.56 இற்காக ரூபா 306,360 தொகை மேற்கொள்ளப்படாத வேலைகளுக்காக செலுத்தப்பட்டிருந்தன.

(உ) மேலதிக வேலைகளுக்காக ரூபா 860,011 ஆன செலவொன்று மேற்கொள்ளப்பட்ட போதும், அதற்காக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வேலை விடயம் இலக்கம் 16 ஊடாக கேட் ஒன்றை வழங்கி பொருத்துவதற்கான வகை ஒன்றாக ரூபா 100,000 மதிப்பிடப்பட்டிருந்தது. கொடுப்பனவு செய்கையில் அளவை அடிப்படையாகக் கொள்ளப்படாமல் முழுப் பணமும் செலுத்தப்பட்டிருந்ததுடன், பௌதீக ரீதியான பரிசோதனையின் போது 1 ½ அங்குல சதுர இரும்பு மற்றும் அமானோ தகரம் பாவிக்கப்பட்டு உறுதி குறைந்த கேட் ஒன்று பொருத்தப்பட்டிருந்தது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீடு கட்டுப்பாடு

மீளாய்வாண்டினுள் வருமானம் மற்றும் செலவின விடயங்கள் இடையில், ஒதுக்கீடு மாற்றப்பட்ட பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் இடையில் கனிசமான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன், இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** 8 மீண்டுவரும் செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 785,000 மற்றும் 6 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,850,000 ஒதுக்கீட்டிலிருந்து எவ்வித செலவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** 4 வருமான விடயங்களுக்கான மதிப்பிடப்பட்ட ரூபா 700,000 ஆன வருமானத்தில், எவ்வித வருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்விற்காக அலுவலகலொருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அவ் அலுவலருக்கு வேறு பணிகள் ஒப்படைக்கப்பட்டிருந்ததனால் போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்றினை செய்ய முடியாமலிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன், பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் | (i) சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் மெய்மை ஆய்வு செய்யப்பட்டு எல்லா சொத்துக்களையும் இனங்காணுவத்திற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) சபைக்கு சொந்தமான காணி முறையான அங்கீகாரமின்றி வெளித்தரப்பினருக்கு பயன்படுத்த இடமளிக்கப்பட்டிருந்தமை. |
| | (iii) சபைக்கு சொந்தமான வாகனமொன்று 4 வருட காலமாக தரிப்பிடத்தில் நிருத்தி வைத்துள்ளமை. |
| (ஆ) கணக்கீடு | (i) சபைக்கு சொந்தமான எல்லா சொத்துக்கலையும் இனங்கண்டு கணக்கிடப்படாமை. |
| | (ii) பசளை இறுதி இருப்பு கணக்கிடப்படாமை. |
| | (iii) கணக்கு மீதிகள் தீர்க்கப்படாமல் தொடர்ந்து முன்கொண்டு வருதல். |
| (இ) காசு மற்றும் வங்கி | (i) வைப்பு செய்யப்பட்ட போதும் மாற்றப்படாது நிலவும் காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| | (ii) மறுக்கப்பட்ட காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| | (iii) இனங்காணப்படாத வரவு மற்றும் செலவு மீதிகளை இனங்காண்டு தீர்க்கப்படாமை. |
| (ஈ) வருமான சேகரிப்பு | (i) கடையறை வாடகை அறவிட கவனம் செலுத்தப்படாமையினால் உயர் நிலுவை நிலவியமை. |
| | (ii) வியாபார அனுமதிப்பத்திரம் தொடர்பாக வருட ஆரம்பத்தில் முறையான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாமை. |
| (உ) ஒப்பந்த நிர்வாகம் | (i) நிர்மாணப்பணிகளிற்காக டென்டர் நடைமுறை பின்பற்றப்படாமை மற்றும் சமூக அடிப்படை சங்கங்களிற்கு வழங்கப்பட்ட அபிவிருத்தி உத்தேசங்கள் தோல்வியுற்றமை. . |

(ii) நிர்மாணப்பணிகள் தொடர்பான மேற்பார்வை பலவீனப்பட்டமை.

(iii) நிர்மாணக் கோவைகள் நாலாவது வரையாக்கப்படாமை.